**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No.844 of 2019**

**Witness PW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அம்பிகா | சாதி | |
| க/பெ | ஸ்ரீகாந்த் | மதம் | |
| ஊர் | | தொழில் | |
| மாவட்டம் | | வயது | |
| | | தேதி | 12.04.2022 |

இன்று (12.04.2022) 1872 ம் ஆண்டுசட்டம் 10ன்படி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது. சாட்சி அடையாள அட்டை மூலம் சரிபார்க்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து நன்கு புரிந்துகொண்டுதான் சாட்சியம் அளிக்கிறேன். பிரதிவாதி 10.01.2014 தேதியில் எனக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டு வா.சா.ஆ.1. 02.12.2016 தேதியில் வா.சா.ஆ.1ல் பிரதிவாதி வரவு வைத்த குறிப்பு வா.சா.ஆ.2. 30.07.2018 தேதியில் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.3. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டார். அதன்பிறகு பிரதிவாதி தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய 11.10.2018 தேதியிட்ட பதில் அறிவிப்பு வா.சா.ஆ.4. மேற்கொண்டு ஆவணங்கள் ஏதும் இல்லை. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

S/d-A.Tamilselvan
I Additional Subordinate Judge,
Villupuram